**08.** அல்லாஹ் தஆலா ஹலாலாக்கியவற்றுள் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுப்பான செயல்
(1) தலாக் (2) குல்உ (3) பலதாரமணம்
(4) கடன் பெறல் (5) நேர்ச்சை செய்தல்

**09.** இலங்கையிலிருந்து ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்வோர் இஹ்ராமுக்காக நிய்யத்து வைக்க வேண்டிய இடம்
(1) அல்-ஜுஹ்பா (2) தாதுல் இராக் (3) கர்னுல் மனாஸில்
(4) துல் ஹுலைபா (5) யலம்லம்

**10.** நபி (ஸல்) அவர்களது மக்கா கால த.்.வாவில் இடம்பெற்ற இஸ்லாத்தின் அடிப்படைப் போதனைகளை உள்ளடக்கியுள்ள விடையினைத் தெரிவுசெய்க.
(1) தௌஹீத், ரிஸாலத், மஆத் (2) கிலாபத், ரிஸாலத், இபாதத்
(3) ரிஸாலத், முஆமலத், ஹிதாயத் (4) ரிஸாலத், இபாதத், வராஸத்
(5) ஜினாயத், இபாதத், மஆத்

**11.** ஹதீஸ், இஸ்லாமிய சட்டக்கலை ஆகிய இரு துறைகளுக்கும் பங்களிப்பு செய்தவர்கள்
(1) இமாம் சுயூதி, இமாம் நவவி (ரஹ்) ஆகியோராவர்.
(2) இமாம் திர்மிதி, இமாம் நஸஈ (ரஹ்) ஆகியோராவர்.
(3) இமாம் இப்னு மாஜா, இமாம் ராபிஈ (ரஹ்) ஆகியோராவர்.
(4) இமாம் மாலிக், இமாம் அஹ்மது (ரஹ்) ஆகியோராவர்.
(5) இமாம் அபூயூசுப், இமாம் பைஹகி (ரஹ்) ஆகியோராவர்.

**12.** இஸ்னாத் ஸஹாபி வரை செல்லும் ஹதீஸ்
(1) மவ்கூப் (2) மர்பூஃ (3) முர்ஸல் (4) மக்தூஃ (5) மவ்லூஃ

**13.** யமாமா யுத்தத்தில் நபித்தோழர்கள் ஷஹீதாக்கப்பட்டதையடுத்து அல்-குர்ஆனைத் தொகுக்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கிய நபித் தோழர்
(1) அபூபக்ர் (ரலி) ஆவார். (2) உமர் (ரலி) ஆவார்.
(3) உஸ்மான் (ரலி) ஆவார். (4) முஆவியா (ரலி) ஆவார்.
(5) உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) ஆவார்.

**14.** ஸகாத் பெறத் தகுதியானோரில் **அர்ரிகாப்** எனப்படுவோர்
(1) கடனாளிகள் (2) வழிப்போக்கர்கள்
(3) ஏழைகள் (4) புதிதாக இஸ்லாத்தை தழுவியவர்கள்
(5) உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமைகள்

**15.** இஸ்லாம் அனுமதித்துள்ள வியாபார முறைகளில் கூட்டு வியாபாரத்தைக் குறிக்கும் சொல்
(1) இஆரா (2) இஜாரா (3) முஷாரகா (4) ஸலம் (5) முஸாரஆ

**16.** இஸ்லாம் உணவுப் பொருட்களை பதுக்கி வைப்பதைத் தடை செய்திருப்பதற்கான பிரதான காரணம்
(1) உணவு பொருட்கள் பழுதடைதல்
(2) உணவு பொருட்களின் விலை அதிகரித்தல்
(3) பொதுமக்கள் பாதிப்படைதல்
(4) உற்பத்தியாளருக்கு இழப்பு ஏற்படல்
(5) உணவு பொருட்களை நீண்ட நாட்கள் சேமித்து வைப்பது கஷ்டமாக இருத்தல்

**17.** இஸ்லாமிய வர்த்தகமுறைகளில் ஒன்றான 'ரஹ்ன்' பற்றிய சரியான கூற்று
(1) இருவர் குறிப்பிட்டதொரு தொகைப் பணத்தை முதலீடு செய்து வர்த்தகத்தில் ஈடுபடல்
(2) ஒரு தரப்பினரது மூலதனத்தையும் மறு தரப்பினரது உழைப்பையும் வைத்து வர்த்தகத்தில் ஈடுபடல்
(3) ஒரு பொருளை குறிப்பிட்டதொரு காலப்பிரிவுக்கு இரவலாக வழங்குதல்
(4) உற்பத்தியில் சமமாக பங்குபெறல் என்ற அடிப்படையில் ஒருவருக்கு விவசாய பூமியை வழங்குதல்
(5) ஒருதொகைப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக குறிப்பிட்டவொன்றை அடகு வைத்தல்

**18.** குலபாஉர்ராஷிதீன் தொடர்பான விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - மூன்றாம் கலீபா

B - முஸைலமாவுக்கு எதிராக போர் தொடுத்தவர்.

C - ஹிஜ்ரத்தின்போது நபி (ஸல்) அவர்களுடன் மதீனாவுக்குச் சென்றவர்.

D - கடற்படையை அறிமுகப்படுத்தியவர்.

E - ஹிஜ்ரி நாட்காட்டி ஆண்டுக் கணிப்பீட்டு முறையை அறிமுகப்படுத்தியவர்.

F - ஹுதைபிய்யா உடன்படிக்கையின்போது சமாதான பேச்சுவார்த்தைக்காக குறைஷிகளின் பக்கம் அனுப்பப்பட்டவர்.

மேலுள்ளவற்றுள் கலீபா உஸ்மான் (ரலி) அவர்களுடன் தொடர்பான விடயங்களைக் கொண்ட தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, D, F (3) B, C, D (4) C, E, F (5) D, E, F

**19.** வாரிசுரிமைச் சட்டத்தில் 'அஸபா' எனப்படுவோர்

(1) அல்-குர்ஆன், சுன்னா குறிப்பிடும் வரையறுக்கப்பட்ட பங்கை பெறும் வாரிசுகளாவர்.

(2) தந்தை வழி நெருங்கிய உறவினராவர்.

(3) அல்-குர்ஆன், சுன்னாவில் பங்குகள் வரையறுத்துக் குறிப்பிடப்படாத மரணித்தவருக்கு நெருக்கமான ஆண் வாரிசுகளாவர்.

(4) குறிப்பிட்ட சிலர் இல்லாதபோது பங்கு பெறுபவராவர்.

(5) மரணித்தவருக்கு நெருங்கிய உறவினர்கள் எவரும் இல்லாதபோது பங்கு பெறும் தூரத்து உறவினராவர்.

**20.** விவாகரத்து முறைகளுள் ஒன்றான 'குல்உ' என்பது

(1) மனைவி, கணவனிடம் ஒரு தொகைப் பணம் அல்லது ஒரு பொருளைக் கொடுத்து விவாகரத்தைப் பெற்றுக்கொள்ளல் ஆகும்.

(2) கணவன், மனைவியை விபச்சார குற்றம் சாட்டி மனைவியை விவாகரத்துச் செய்தல் ஆகும்.

(3) சத்தியத்தின் பின்னர் ஏற்படும் விவாகரத்து ஆகும்.

(4) தலாக் ரஜஈயின் பின்னர் ஏற்படும் விவாகரத்து ஆகும்.

(5) மனைவியை தாய்க்கு ஒப்பிடுவதன் மூலம் ஏற்படும் விவாகரத்து ஆகும்.

**21.** மரணித்தவரது சொத்துக்களை பகிர்ந்தளிப்பது தொடர்பான சட்ட விதிகளை உள்ளடக்கிய கலை

(1) இல்முல் மீராஸ் எனப்படும். (2) இல்முல் பிக்ஹு எனப்படும்.

(3) இல்முல் பலாகா எனப்படும். (4) இல்முல் ஜரஹ்வத்த.ீதீல் எனப்படும்.

(5) இல்முல் அகீதா எனப்படும்.

**22.** புனித ரமழான் மாத நோன்பினை நோற்பதற்கு போதியளவு தேக ஆரோக்கியம் அற்ற வயோதிபர்

(1) தௌபா செய்ய வேண்டும்.

(2) பித்ரா கொடுக்க வேண்டும்.

(3) அறுபது ஏழைகளுக்கு உணவளித்தல் வேண்டும்.

(4) நோன்பை கழா செய்ய வேண்டும்.

(5) கப்பாரா கொடுக்க வேண்டும்.

**23.** அஸிலிலும் பரஇலும் இருக்கும் இல்லத் சமமான பெறுமானம் கொண்டதாக காணப்படும் கியாஸ் யாது?

(1) கியாஸ் அவ்லா (2) கியாஸ் ஜலி (3) கியாஸ் அத்னா

(4) கியாஸ் முஸாவி (5) கியாஸ் கபி

**24.** குறிப்பிட்ட சிலரின் காரணமாக வேறு சிலருக்கு பங்கு குறைவாகக் கிடைத்தல்

(1) ஹஜப் (2) ஹஜபுன்நுக்ஸான் (3) ஹஜபுல் ஹிர்மான்

(4) அஸபா (5) தவுல் அர்ஹாம்

**25.** பின்வருவனவற்றைக் கருதுக

A - முனாபிக்களின் பண்புகள் பற்றி விளக்கும் வசனங்கள்

B - நீண்ட வசனங்கள், நீண்ட அத்தியாயங்கள்

C - முன்னைய வேதங்கள் பற்றிய உண்மைத் தன்மையை விளக்கும் வசனங்கள்

D - வசனக் கவர்ச்சி, சிறிய ஆயத்துக்கள் உள்ளவை

E - மனிதர்களே! என விளிக்கும் வசனங்கள்

மேற்படி கூற்றுகளுள் மதனி சூராக்களுடன் தொடர்பான விடையினைத் தெரிவுசெய்க.

(1) A, B, C (2) A, C, D (3) A, D, F (4) B, C, E (5) C, D, E

**26.** ஒருவரது கையிருப்பில் ரூபா. 1, 000, 000 பணம் இருக்கிறது. அவர் செலுத்தவேண்டிய கடன் ரூபா 200,000. குறித்த வருடத்தில் ஸகாத்தின் நிஸாப் ரூபா 700,000 எனின். அவர் வருட இறுதியில் செலுத்த வேண்டிய ஸகாத்தின் அளவு

(1) ரூபா 5,000 ஆகும். (2) ரூபா 10,000 ஆகும். (3) ரூபா 15,000 ஆகும்.
(4) ரூபா 20,000 ஆகும். (5) ரூபா 25,000 ஆகும்.

**27.** ஒரு முஸ்லிம், ஹலாலான உணவுவகைகளை உட்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்படுவதற்கான காரணம், அவை

(1) உடல், உள ஆரோக்கியத்திற்கு உகந்தவையாகும்.
(2) உடல் வளர்ச்சிக்கு அவசியமாகும்.
(3) ஷரீஆவால் வலியுறுத்தப்பட்டுள்ளமையாகும்.
(4) சுத்தமும் சுகாதாரமுமிக்கவையாகும்.
(5) சக்தியும் சுவையுமிக்கவையாகும்.

**28.** இஸ்லாமிய நிதி நிறுவனமான 'பைதுல்மால்' ஐ அறிமுகப்படுத்திய ஸஹாபி

(1) அபூபக்ர் (ரலி) ஆவார். (2) உமர் (ரலி) ஆவார். (3) உஸ்மான் (ரலி) ஆவார்.
(4) அலி (ரலி) ஆவார். (5) முஆவியா (ரலி) ஆவார்.

**29.** "வாலிபர்களே! உங்களில் வசதி படைத்தவர்கள் திருமணம் செய்துகொள்ளவும். ஏனெனில் அது பார்வையைக் கட்டுப்படுத்தவும் கற்பைப் பேணவும் சிறந்ததாகும். வசதியற்றவர்கள் நோன்பு நோற்பது அவர்களுக்குப் பாதுகாப்பானதாகும்." என்பது

(1) அல்-குர்ஆனின் கூற்றாகும். (2) நபி (ஸல்) அவர்களது கூற்றாகும்.
(3) ஒரு ஸஹாபியின் கூற்றாகும். (4) ஒரு இமாமின் கூற்றாகும்.
(5) ஒரு சூபி ஞானியின் கூற்றாகும்.

**30.** பின்வருவனவற்றுள் தொழுகையின் மூலம் ஒருவருக்கு கிடைக்கும் ஆன்மீக பயன்பாடுகளில் ஒன்று

(1) இறையருள் (2) உடல், உடை சுத்தம்
(3) ஆரோக்கிய வாழ்வு (4) நேரமுகாமைத்துவப் பயிற்சி
(5) தலைமைத்துவ கட்டுப்பாட்டுக்கான பயிற்சி

**31.** குர்ஆனியக் கலைகளுடன் தொடர்பான 'முதஷாபிஹாத்' என்பது பற்றிய சரியான கூற்று

(1) பொருள் தெளிவான அல்-குர்ஆன் வசனங்கள்
(2) பல பொருள்களுக்கு இடம்பாடான அல்-குர்ஆன் வசனங்கள்
(3) சட்டம் மாற்றப்பட்ட அல்-குர்ஆன் வசனங்கள்
(4) சூராக்களின் ஆரம்பத்தில் இடம்பெறும் தனி எழுத்துக்கள்
(5) அகீதா தொடர்பான அல்-குர்ஆன் வசனங்கள்

**32.** இஸ்லாமிய வங்கி முறைமையின் பிரதான நோக்கங்களில் ஒன்று

(1) வட்டியுடனான தொடர்புகள் செயற்பாடுகளைத் தவிர்த்துக்கொள்வதற்கு பொதுமக்களுக்கு உதவுதல்
(2) பொது மக்களது சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல்
(3) பொது மக்களது சிறுதொழில்களுக்கு உதவுதல்
(4) பொது மக்களுக்கு நவீன தொழில்துறையில் ஈடுபடுவதற்கு வழிவகுத்தல்
(5) பொது மக்களது செல்வத்தைப் பாதுகாத்தல்

**33.** 'மத்ரஸது அஹ்லிர் ர.்.யி' எனப்படுவோர்
(1) சுய சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுத்து சட்டங்களை விளக்குவோராவர்.
(2) ஹதீஸ்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சட்டங்களை விளக்குவோராவர்.
(3) இஜ்திஹாத் செய்வதற்கு தகைமை பெற்றோராவர்.
(4) மதுஹபுகளை பின்பற்றுவதில் தீவிர ஆர்வம் கொண்டோராவர்.
(5) மு.்.தஸிலா சார்பு சிந்தனையுடையோராவர்.

**34.** ஷரீஆவின் அடிப்படையில் குற்றங்களுக்கு தண்டனை வழங்கும்போது கவனத்திற்கொள்ளவேண்டிய விடயம் தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் **பிழையானது**
(1) தண்டனை பொருத்தமானதாக காணப்படல்
(2) தண்டனை சட்டரீதியானதாக காணப்படல்
(3) தண்டனை குற்றங்களைப் பொறுத்து வேறுபடல்
(4) தண்டனை வழங்கும்போது குற்றமிழைத்தவரின் அந்தஸ்து, பதவி போன்றவற்றை கவனத்திற் கொள்ளல்
(5) தண்டனை சமூகப் பாதுகாப்பை இலக்காகக் கொண்டிருத்தல்

**35.** திருமணத்தின்போது 'வலி'யாக வருவதற்கு **பொருத்தமற்றவர்**
(1) தந்தையின் தந்தை ஆவார். (2) தாய் வழி சகோதரன் ஆவார்.
(3) சகோதரனின் மகன் ஆவார். (4) தந்தையின் சகோதரன் ஆவார்.
(5) உடன் பிறந்த சகோதரன் ஆவார்.

**36.** மனைவியை மீள அழைத்துக்கொள்வதற்கு ஏதுவாக இஸ்லாம் அனுமதித்துள்ள விவாகரத்து முறை
(1) பாயின் (2) ஈழாஉ (3) குல்உ (4) ரஜ்ஈ (5) பஸ்கு

**37.** இமாம் புஹாரி (ரஹ்) அவர்களின் ஆசிரியர்களுள் ஒருவர்
(1) இமாம் அபூதாவூத் (ரஹ்) (2) இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் (ரஹ்)
(3) இமாம் நஸாஈ (ரஹ்) (4) முஹம்மது இப்னு அஹமது மரூஸி (ரஹ்)
(5) இமாம் தபராணி (ரஹ்)

● **38** தொடக்கம் **41** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் **X, Y** என்னும் நிரல்களின் கீழ் தரப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் ஒரு வகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. அதன்படி **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப **Y** நிரலை ஒழுங்குப்படுத்தும்போது பொருத்தமாக அமையும் சேர்மானத்தைத் தெரிவு செய்க.

**38.**

| | X | Y |
|---|---|---|
| (i) | இமாம் ஷாபிஈ (ரஹ்) | A - முஅத்தா |
| (ii) | இமாம் அபூஹனீபா (ரஹ்) | B - முஸ்னத் |
| (iii) | இமாம் மாலிக் (ரஹ்) | C - பிக்ஹுல் அக்பர் |
| (iv) | இமாம் அஹ்மது (ரஹ்) | D - அல்-உம்மு |

(1) A B C D (2) B C D A (3) C B A D (4) D B A C (5) D C A B

**39.**

| | X | Y |
|---|---|---|
| (i) | தவ்பா | A - இறை நேசம் |
| (ii) | ரிழா | B - உளத்தூய்மை |
| (iii) | இக்லாஸ் | C - இறை திருப்தி |
| (iv) | மஹப்பத் | D - பாவ மன்னிப்பு |

(1) A D C B (2) B C A D (3) B D C A (4) D A B C (5) D C B A

**40.**

| | X | Y |
|---|---|---|
| (i) | வலி | A - சாட்சி |
| (ii) | ஷாஹித் | B - பாதுகாவலர் |
| (iii) | மஹர் | C - திருமணத்தின்போது மணமகன் வழங்கும் விருந்து |
| (iv) | வலீமா | D - திருமணத்தின்போது மனைவிக்கு கணவன் வழங்கும் பரிசு |

(1) A C B D (2) B A D C (3) B C A D (4) C D A B (5) D A C B

**41.**

| | X | Y |
|---|---|---|
| (i) | கிலாபத் | A - அற்புதம் |
| (ii) | இபாதத் | B - பூமியை வளப்படுத்தல் |
| (iii) | மு.ஃஜிஸத் | C - பிரதிநிதித்துவம் |
| (iv) | இமாரத் | D - வணக்கம் |

(1) A C D B (2) A D B C (3) B D C A (4) C D A B (5) D B C A

**42.** ‘ஸஹீபா ஸாதிகா’ என்ற ஹதீஸ் தொகுப்பை திரட்டிய நபித்தோழர்
(1) அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) ஆவார். (2) அம்ரு இப்னுல் ஆஸ் (ரலி) ஆவார்.
(3) ஸஃது இப்னு அபீவக்காஸ் (ரலி) ஆவார். (4) அனஸ் இப்னு மாலிக் (ரஹ்) ஆவார்.
(5) ஸுபைர் இப்னுல் அவாம் (ரலி) ஆவார்.

**43.** இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் பிறந்த ஆண்டு
(1) ஹி : 204 (2) ஹி : 205 (3) ஹி : 206 (4) ஹி : 207 (5) ஹி : 208

**44.** இஸ்லாமிய முக்கிய கடமைகளுள் உம்ராவில் **இடம்பெறாத** ஒரு செயல்
(1) இஹ்ராம் (2) தவாப் (3) ஸஃயு (4) ஹல்க் (5) அறபாவில் தரித்தல்

- **45** தொடக்கம் **50** வரையிலான வினாக்களில் இரண்டு வகையான கூற்றுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள சோடிக்கூற்றுகளுக்கு பின்வரும் (1), (2), (3), (4), (5) என்பவற்றில் மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | பிழையானது | சரியானது |
| (3) | சரியானது | பிழையானது |
| (4) | பிழையானது | பிழையானது |
| (5) | சரியானது | சரியாக இருப்பதுடன் முதலாம் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **45.** | வாஸிலுப்னுல் அதா, இமாம் ஹஸனுல் பஸரியின் ஆசிரியராவார். | முஃதஸிலாக்கள் அல்-குர்ஆன், சுன்னாவின் கருத்துக்களை முதன்மைப்படுத்துகின்றனர். |
| **46.** | ஆண்கள் வெள்ளி மோதிரம் அணிவதில் தவறில்லை. | தீங்கிழைக்க வரும் பிராணிகளையும் தீயினால் சுட்டெரிப்பதை ஷரீஆ தடைசெய்கின்றது. |
| **47.** | முதவாதிரான ஹதீஸ்கள் நம்பகமானவைகளாகும். | ஹஸன் தரத்திலுள்ள ஹதீஸ்களை ஆதாரமாகக் கொள்ள முடியாது. |
| **48.** | இஸ்லாமிய பொருளாதாரக் கோட்பாடு தெய்வீகமானதாகும். | கியாஸும் ஸஹாபாக்களது இஜ்மாவும் சம தரத்தில் நோக்கப்படுகின்றன. |
| **49.** | ‘உர்பு’ ஐ ஒரு சட்ட முலாதாரமாக கொள்ள முடியாது. | ஹராத்திற்கு வழிவகுப்பவைகளும் ஹராம் ஆகும். |
| **50.** | நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் வெளிநாட்டு விவகாரங்களுக்கு பொறுப்பாக முஆவியா (ரலி) அவர்களை நியமித்திருந்தார்கள். | நபி (ஸல்) அவர்கள் இராஜதந்திர விவகாரங்களுக்குப் பொறுப்பாக உபைதா (ரலி) அவர்களை நியமித்திருந்தார்கள். |

❊ ❊ ❊

- **நோன்பு : - நோன்பு என்பது அரபியில் 'அஸ்ஸவ்ம்' என்று கூறப்படும். இப்பதம் தடுத்துக்கொள்ளல், தவிர்ந்திருத்தல் போன்ற கருத்துக்களைத் தரும்.**

- **இஸ்லாமிய வழக்கில் ஒரு முஸ்லிம் கிழக்கு வெளுத்ததிலிருந்து சூரியன் அஸ்தமிக்கும் வரை உண்ணல், பருகல், உடலுறவு கொள்ளல் போன்ற நோன்பை முறிக்கும் காரியங்களை விட்டும் தவிர்ந்திருக்கும் ஒரு வணக்கத்தைக் குறிக்கும்.**

**நோன்பின் நோக்கங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.**

- தக்வாவை ஏற்படுத்தல் (2 : 183)
- அல்லாஹ்வுக்காக தன் தேவைகளையும், ஆசைகளையும் கட்டுப்படுத்தும் பயிற்சியை வழங்குதல். "யார் பொய் பேசுவதையும் அதன் அடிப்படையில் செயற்படுவதையும் விட்டுவிடவில்லையோ, அவர் பசித்திருப்பதிலும் தாகித்திருப்பதிலும் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை" (புஹாரி)
- தீய செயல்களிலிருந்து விடுபடல்.
- அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிதல்.
- அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறுதல். ' நோன்பு எனக்குரியது அதற்குரிய கூலியை நானே வழங்குவேன்" (புஹாரி)
- நிறைவேற்றுவதன் மூலம் மறுமை வெற்றியை உறுதிப்படுத்தல், 'அல்குர்ஆனும், நோன்பும் மறுமையில் பரிந்துரை செய்யும்" (அஹ்மத்)
- உலகின் சீரான செயற்பாட்டுக்கு உந்து சக்தியாக அமைதல்.
- நற்கூலியைப் பெற்று சுவனப்பாக்கியத்தை அடைந்து கொள்ளல். 'நோன்பாளிக்கு இரு மகிழ்ச்சி உண்டு. ஒன்று நோன்பு திறக்கும் போது. அடுத்தது அல்லாஹ்வை சந்திக்கும் போது" (புஹாரி, முஸ்லிம்)
- உள நிம்மதியை ஏற்படுத்தல்

(இவைபோன்ற கருத்துக்களில் ஒன்று விளக்கி எழுதியிருப்பின் 2 புள்ளிகள்)

(iii) மனித வாழ்வின் அனைத்துச் செயற்பாடுகளும் இபாதத்தாக அமைவதற்கு அவசியமான நிபந்தனைகளுள் நான்கினை குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை விளக்குக. (06 புள்ளிகள்)

- இக்லாஸ் (தூய எண்ணம்).
- ஷரீஆவின் அனுமதி.
- ஷரீஆவின் வரையறைகளை மீறாதிருத்தல்.
- நேர்த்தியாக செய்தல்.
- அடிப்படை வணக்கங்களுக்கு தடையாக அமையாதிருத்தல்.

(மேற்கூறிய ஐந்து கருத்துக்களில் நான்கை குறிப்பிட்டிருப்பின் 2 புள்ளிகளும் இரண்டை விளக்கி எழுதியிருப்பின் 4 புள்ளிகளுமாக எழுதியிருப்பின் 2+ 4 = 06 புள்ளிகள்)

**ஹதீஸ் துறைக்கான இமாமவர்களின் பங்களிப்புகள்**

- கூபா, பஸரா, ஹிஜாஸ் போன்ற பிரதேசங்களுக்கு சென்று ஹதீஸ்களை திரட்டினார்கள்
- பல இலட்சம் ஹதீஸ்களை திரட்டி இருந்த இமாம் அவர்கள் 3956 ஹதீஸ்களை தேர்ந்தெடுத்து ஜாமிஉத் திர்மிதி என்ற நூலை எழுதினார்கள்

**இந்நூலின் சிறப்புக்கள்**

i. ஒரே ஹதீஸ் மீண்டும் மீண்டும் வராமை
ii. புகஹாக்கள் (சட்ட அறிஞர்கள்) எந்த ஆதாரங்களை கொண்டு சட்டங்களை வகுத்துள்ளனர் என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.
iii. ஹதீஸ்களின் பிரிவுகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.
iv. ஹதீஸ் அறிவிப்பாளர்கள் (ராவிகள்) பற்றிய விளக்கம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது
v. இமாம்களின் கருத்து வேறுபாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன

(வாழ்க்கை வரலாறு பற்றி 5 விடயம் சுருக்கமாக விளக்கப்படடிருப்பின் 5 புள்ளிகளும் ஹதீஸ் துறை பங்களிப்புகள் தொடர்பாக 5 விடயங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டிருப்பின் 5 புள்ளிகளுமாக மொத்தம் 5 + 5 = 10 புள்ளிகள்)

(ii) கவாரிஜ் சிந்னை பிரிவின் தோற்றம் வளர்ச்சி பற்றி விளக்கி அதன் பிரதான கோட்பாடுகளை விபரிக்குக.
(10 புள்ளிகள்)

**கவாரிஜின் தோற்றம் - வளர்ச்சி**

- கவாரிஜ் என்ற சொல் காரிஜ் என்ற மூலச்சொல்லில் இருந்து தோன்றியதாகும். கருத்து வெளியேறியோர்
- இச்சொல் தலைவரின் கட்டுப்பாட்டை விட்டு வெளியேறிச்சென்று தலைமைத்துவத்துக்கு எதிராக கிளர்ச்சி செய்பவர்களை குறிக்கும்.
- பாவம் செய்பவன் காபிராவான் என்ற கருத்தின் அடிப்படையில் பெரும்பான்மை முஸ்லிம் சமூகத்தை விட்டும் பிரிந்து அதற்கு எதிராக செயற்படும் பிரிவினர் கவாரிஜ் எனப்பட்டனர்.
- இவர்களின் தோறற்த்திற்கு பின்னனியாக அமைந்தது ஸிப்பீன் யுத்தத்தின் தீர்ப்பேயாகும். "தீர்ப்புக் கூறும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு வேறு யாருக்கும் இல்லை" எனக் கூறி பிரிந்தவர்களே இவர்களாவர்.
- அப்துல்லாஹ் இப்னு வஹப் அர்ராஸிபி என்பவரை தலைவராகக் கொண்டு பிரிந்து சென்றவர்களே இவர்கள்.

**இவர்களின் வேறு பெயர்கள்**

முஹக்கிமா – ஹரூரிய்யா – அஹ்லு நகர்வான் – அஷ்ஷுராத் – அல்மாரிகா – அந்நவாஸிப்

**உட்பிரிவுகள்**

அல்–அஸாரிகா – அஸ்ஸுப்ரிய்யா –அந்நஜ்தாத் – அல்அலவிய்யா

**பண்புகள்**

- தீவிரத்தன்மை இ எதிர்ப்பு மனப்பாங்கு இ மேலோட்டமான அறிவு இ முதிர்ச்சி இன்மை, சொத்தாசை

**கவாரிஜ்களின் கோட்பாடுகள்**

1. பெரும்பாவம் செய்தவர்கள் நரகில் நிரந்தரமாக இருப்பர்
2. உஸ்மான்(ரலி), அலி(ரலி) உட்பட இன்னும் அதிகமான ஸஹாபாக்களையும் காபீர்கள் எனக் கூறல்
3. மறுமையில் அல்லாஹ்வை காண முடியும் என்பதை மறுத்தல்.
4. ஸிராத்தையும் அதை கடந்து செல்வதையும் நிராகரித்தல்.
5. அல்லாஹ் கூறும் விடயங்களில் நபிக்கு கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை எனக் கூறல்.
6. குர்ஆனின் வெளிப்படையான கருத்து என தாம் நம்பும் விடயங்களுக்கு முரணாக வரும் முதவாதிரான ஹதீஸ்களையும் நிராகரித்தல்
7. குர்ஆனும் ஸுன்னாவும் உறுதிப்படுத்தும் அல்லாஹ்வின் பண்புகளை மறுத்தல்
8. தமது கொள்கையில் இருப்பவர்களுடன் மாத்திரம் ஜமாஅத்தாக தொழுதல்
9. ஷபாஅத்தை மறுத்தல்
10. திருமணத்தின் பின் விபச்சாரத்தில் ஈடுபடும் ஆணுக்கு 'ரஜ்ம்' தண்டனை வழங்குவதை மறுத்தல்
11. குறைந்தபட்சம் 40 பேர் இருக்கும் நிலையில் தவறிழைக்கும் தலைவர்களுக்கு எதிராகப் புரட்சியில் ஈடுபடுவது கடமை எனக் கூறல்

(தோற்றம், வளர்ச்சி பற்றி விளக்கியிருப்பின் 5 புள்ளிகளும் கோட்பாடுகள் பற்றி கூறப்பட்டிருப்பின் 5 புள்ளியுமாக மொத்தம் 5 + 5 = 10 புள்ளிகள்)

08. பின்வருவன பற்றி சிறு குறிப்பு எழுதுக

(i) **மஸ்லஹா முர்ஸலா** (05 புள்ளிகள்)

- மனித நலனை பதுகாப்பது அல்லது சமூக நலனை பாதுகாப்பது என்பது இதன் கருத்து.
- மக்களது அவசியத்தேவைகள் சாதாரண தேவைகள், மேலதிகத் தேவைகள் என்பனவற்றை நிறைவேற்றிக்கொள்வதன் மூலம் மக்களது நலன்களை காப்பதையே இம்மூலாதாரம் குறித்து நிற்கின்றது.
- குறித்த ஒரு விடயம் தொடர்பாக அல்குர்ஆன் ஸுன்னாவில் சொல்லப்படாத போது மனித நலனை கருத்திற் கொண்டு தீர்வு பெறுவதை இது குறிக்கும்

உதாரணங்கள் :

அல்குர்ஆன் நூலுருப்படுத்தப்படல், திணைக்களங்கள்,நகரங்கள்,சிறைச்சாலைகள் உருவாகியமை

**இது ஒரு சட்ட மூலாதாரம் என்பதற்கான ஆதாரங்கள்**

1. முஸ்லிம்கள் நல்லதாக காணும் ஒரு விடயம் அல்லாஹ்விடத்திலும் நல்லதாக இருக்கும் (ஹதீஸ்)
2. ஸகாபாக்கள் மஸ்லஹா முர்ஸலாவை அடிப்படையாக வைத்து செயற்பட்டுள்ளமை

**மஸ்லஹா முர்ஸலாவுக்கான நிபந்தனைகள்**

1. நலன் பிரமையின் அடிப்படையில் அமையாது யதார்த்தமாக இருத்தல் வேண்டும்
2. நலன் எல்லோருக்கும் பொதுவானதாக அமைய வேண்டும்
3. நலன் ஷரீஆவின் நோக்கங்களுக்கு அமைவாக இருக்க வேண்டும்
4. நலன் ஒரு சிரமத்தை நீக்குவதாக அல்லது ஒரு நலனை பாதுகாப்பதாக இருக்க வேண்டும்

இவை போன்ற 5 விடயங்கள் எழுதியிருப்பின் 1 × 5 = 05 புள்ளிகள்

(ii) **இஸ்லாமும் சமய நல்லிணக்கமும்** (05 புள்ளிகள்)

- ஒருவர் தனது சமயத்தை பின்பற்றுவதுடன் பிறரது சமய கலாச்சார பண்பாடுகளையும் மதித்து வாழ்வதையே சமய நல்லிணக்கம் எனலாம்.
- இஸ்லாம் சமய நல்லிணக்கத்தை விரும்பும் மார்க்கம்
  "உங்களுக்கு உங்களது மார்க்கம் எனக்கு எனது மார்க்கம்" (அல்-குர்ஆன்)

**இஸ்லாம் முன்வைக்கும் சமய நல்லிணக்கத்திற்கான அடிப்படைகள்**

1. அனைத்து மனிதர்களும் ஒரே இறைவனான அல்லாஹ்வின் படைப்புக்கள்
2. அனைத்து மனிதர்களும் சகோதரர்கள்
3. எல்லா மனிதர்களும் கண்ணியமானவர்கள். இது அல்லாஹ்வால் மனிதனுக்கு வழங்கப்பட்டது.
4. ஒவ்வொரு மனிதனுக்கும் தான் விரும்பும் கொள்கையை, மதத்தை பின்பற்றும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.
5. மனித சமூகத்திற்கு நன்மை பயப்பது ஒவ்வொரு மனிதர் மீதும் கடமை.
6. அடிப்படையில் அனைத்து மனிதர்களும் சிறந்தவர்கள்
7. சூழ்நிலை, நிர்ப்பந்தங்களாலேயே மனிதன் மாற்றமடைகின்றான்
8. பன்மைத்துவம் இறை நியதிகளில் ஒன்று.
9. பரஸ்பர உதவிகளை மேற்கொள்ளல்.
10. யாருக்கும் பொதுவான நீதி.
11. கலந்து வாழ்ந்தாலும் தனித்துவங்களை பேணி வாழ்தல்.

இவை போன்ற 5 விடயங்கள் எழுதியிருப்பின் $1 \times 5 = 05$ புள்ளிகள்

(iii) **பைதுல் மால்** (05 புள்ளிகள்)

- இஸ்லாமிய நாட்டில் காணப்படும் அரச திறைசேரியே பைதுல் மால் எனப்படும்.
- இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழும் மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்வதற்குரிய பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு அரசினால் திரட்டப்படும் பணத்தை பரா மரிப்பதற்கான ஒரு வழிமுறையாக பைத்துல் மால் காணப்படுகின்றது.
  பைத்துல் மாலில் உள்ளடங்குபவை
- ஸகாத் வரி, கராஜ் (நிலவரி), கனீமத், பைஉ என்னும் உடன்படிக்கை வரி, ஜிஸ்யா, அரச பொது சொத்துக்கள், உரிமையாளர் இன்றி கைவிடப்படும் பொருட்கள், வக்பு சொத்துக்கள்

**பைத்துல் மாலில் இருந்து மேற்கொள்ளும் செலவினங்கள்**

- அதிகாரிகளின் சம்பளம், இராணுவச் செலவுகள், கட்டுமான பணிக்கான செலவினங்கள் (நகர அமைப்பு திட்டங்கள், கல்விக்கூடங்கள், மருத்துவ மனைகள், பள்ளிவாசல்கள்,சிறைக் கூடங்கள் போன்ற சமூக நலத்திட்டங்கள், ஏழை,வறியவர்களுக்கான உதவிகள்)
- உமர்(ரலி) தமது ஆட்சியில் அம்மார் பின் யாஸிர் (ரலி) அவர்களை கூபாவின் ஆளுனராக நியமித்த போது பைத்துல் மாலின் விடயத்தில் தனக்கு ஆலோசகராகவும் நியமித்தார்.

இவை போன்ற 5 விடயங்கள் எழுதியிருப்பின் $1 \times 5 = 05$ புள்ளிகள்

